# கற்புக்கனல்



JPL
C2209

த. துரைசிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

27/2-05-1992
பகுதி
யாழ்ப்பாணம்



KOHA-JPL

# கற்புக் கனல்

86570

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

த. துரைசிங்கம் *B. A (Hon's)*

வெளியீடு:—

ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை,
235, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

86570 C.C

முதற் பதிப்பு : ஆவணி 1986.

(C) உரிமை : நூலாசிரியருக்கு.

விலை : ரூபா 5-00

894.8111/ஸ்ரீ

வெளியீடு :

ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை,
235, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

அச்சுப்பதிப்பு :

ஸ்ரீ சுப்பிரமணிய அச்சகம்,
63, B. A. தம்பி வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA JPL

# கற்கண்டுக்
# கவிதை நூல்!

இசையுடனே அசைவாடப் பாலர் பாட்டு
இயற்றினார் அரிச்சுவடி நீதிக் கதைகள்
திசைபோய புகழ்பெற்றார் பரிசும் பெற்றார்
தித்திக்கும் தமிழ்செய்தார் இந்தக் கவிஞர்
வசை கூறி சினந்து தன்சிலம் புடைத்தாள்
வளவரசன் பாண்டியனின் உயிரைப் போக்கும்
கசையடி போற்கண்ணகியின் கதையைச் சிறுவர்
காவியமாய்ப் புதிதாகப் பாடி யுள்ளார்.

அத்தாணி மண்டபத்தில் அழகு மிக்க
அரியணையில் வீற்றிருந்தான் அரசன், தேவி
பத்தாவின் அருகிருந்தாள் அந்த வேளை
பதைத்தோடி வந்தாளே நீதி கேட்க
பத்தாவை இழந்தவளாம் கண்ணகி யுந்தன்
பரல்காட்டச் சிலம்புடைத்த அவலக் காட்சி
முத்தாகக் கவிதையிலே அமைத்து எங்கள்
முன்வைக்க இக்கவிஞர் மொழிந் திட்டாரே.

86570

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற் கொண்ட பேர்களுக்கே இனிமை ஊட்டும்
தனிக்கவிதை கொண்டநூல், கவிதை தன்னை
கற் கண்டுக் கவி என்பேன், கண்டு கேட்டோர்
கண்பட்டு வாயூறி மனதில் போட்டு
நற் கொண்டார் நலன்பெற்று இந்த நூலை
நயந்துமிக வியப்பாரே, இந்தச் சந்தச்
சொற்கொண்ட கவிதைகளை சிறுவர் தாமும்
சுவைத்து மிகக் களிக்கலாம் படித்துத் தானே.

இக்கவிஞர் எழுத்தாளர் துரைசிங்க மெண்பார்
ஏற்றமுறக் குழந்தைகட்கு நண்பர் ஆவார்
பக்குவமாய் நண்பர்கட்கு அழகுச் சந்தப்
பாக்களையும் புனைவதிலும் சமர்த்தர் ஆவார்
திக்கெல்லாம் தமிழ் மணக்கச் செய்யும் நாட்டம்
செய்திட்டார் இலக்கியத்தின் இதுமுன்னோட்டம்
மிக்க உங்கள் கண்ணோட்டம் இருக்கு மாயின்
வியக்கநிறை வேறுமிவர் மனதின் கோட்டம்.

கவிஞர். சி. க. நாகலிங்கம்.

புங்குடுதீவு,
05-08-86.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பஞ்செல்லாம் புடைவையென உருவம் மாறி
பதுங்குவதும் இவள்மென் பதத்துக் கஞ்சி
மஞ்செல்லாம் மேலெழுந்து கோலம் தேய்ந்து
மறைந்தோடும் கரியஇரு குழலுக்கஞ்சி
கொஞ்சுதமிழ் ஆசிரியை குடும்பப் பெண்ணாய்
கோடறியாக் கற்புநிறை துணைவியான
வஞ்சியவள் வான்புக்க புவனேஸ் வரியாம்
மங்கைக்கே சமர்ப்பணம் இந்தநூலே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னோட்டம்.





சிலப்பதிகாரம் முத்தமிழ்க் காப்பியம். தலையாய தமிழ் இலக்கியம். இளங்கோவடிகள் இவ்வுலகுக்கு வழங்கிய ஒப்பற்ற மக்கள் இலக்கியம் இது. இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழ் நிறைந்து விளங்கும் உணர்ச்சிக் காவியம். ''தேனிலே ஊறிய செந்தமிழின் சுவை தேரும் சிலப்பதிகாரமதை ஊனிலே எம்முயிர் உள்ளளவும் நிதம் ஓதியுணர்ந்தின்புறுவோமே'' என்று பாடினார் கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை.

தமிழ் மக்களுக்கும் தமிழ் நாட்டுக்கும் பெருமை சேர்க்கும் ஒப்பற்ற காப்பியமாக விளங்கும் சிலப்பதிகாரம் கற்போர் நெஞ்சங்களையெல்லாம் கவருந்தன்மை வாய்ந்தது. இதனாற்றான் ''நெஞ்சை அள்ளுஞ் சிலப்பதிகாரம்'' என்றார் கவியரசர் பாரதியார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மங்கை மாந்தரைக் கதைத் தலைவர்களாகக் கொண்டு அரசர்க்கும் பிறர்க்கும் அறநெறி உணர்த்தும் வகையில் அமைந்த இக்காப்பியம் இன்று உலக மக்களனைவருக்கும் உரிய இலக்கிய மாக மிளிர்கிறது. இக்காப்பியத்தின் தலைவி கண்ணகி. வள்ளன் மையில் வான்மேகத்துக்கு நிகரான வணிகன் மாநாய்கனது செல்வமகள். திருமகளின் வடிவும் வனப்பும்பெற்று விளங்கிய இவள், கற்பினுக்கு அணியாகவும் திகழ்ந்தாள்.

கன்னித்தமிழ் வளர்க்கும் காவிரிப்பூம் பட்டினத்தில் கோவலன் என்னும் குறைவிலாச் செல்வனை மணந்து காமனும் ரதியும் போலக் கூடிவாழ்ந்தவள் கண்ணகி. கோவலனது புறநெறி அவள் வாழ்வில் அக்கினிப் பரீட்சையாக அமைந்தது. இதனால் விளைந்த துன்பங்களோ பலப்பல. துன்பங்கள் பல தொடர்ந்தபோதிலும் கணவன்மீது கொண்ட பற்றுமட்டும் அவளைவிட்டு அகலவில்லை. தீயிலிட்டுக் காய்ச்சிய பொன்போல ஒளிர்கிறது அவளது தியாக உணர்வு.

மீண்டும் தன்னிடம் வந்த கோவலனுடன் கூடி மதுரை மாநகர் புறப்பட்டாள் கண்ணகி. அங்கு வஞ்சனையாற் தன் கணவன் கொலையுண்டான் என்ற செய்தியறிந்ததும் உள்ளம் குமுறினாள். நீதிகேட்கப் பாண்டியன் நெடுஞ்செழியன் அரண்மனை நோக்கிப் புறப்பட்டாள். அதன்பின் நிகழ்ந்தனவற்றைக் கவிதை வடிவில் கற்புக் கனலாகப், பத்தினித் தெய்வமாகக் காண்போம்.

86570



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காவலன் முன் கண்ணகி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காவலன் முன்.

மதி கெட்ட மன்ன, நீதி முறையோ என்றாள்
வயிறலைத்து வாய்பொருமித் துயரம் உற்றாள்
கொதித் தெழும் சினத்தீயால் நாவும் வரண்டு
குமுற மனம் கண்ணீரால புகைந்து எழுந்தாள் 1

ஒற்றைத்தன் சிலம்பதனைக் கையில் எடுத்தாள்
உயிர் கொதிக்க கண்ணகியாள் ஓடிவந்தாள்
முற்றுந் தன் சீர்மங்கும் அரசன் முன்னே
முறை கேட்க அரண்மனையின் வாயில் சேர்ந்தாள் 2

காவலனும் நிலைகுலைய அதட்டி நீ போய்
கண்ணில்லான் செழியனுக்கே உரைப்பாய் என்றான்
மேவி யவன் பாண்டியனை வணங்கி வாழ்த்தி
மெய் நடுங்க மொழி குழறச் சொல்லல் உற்றான் 3

கண்ணிரண்டும் தீப்பொறியே பறக்கக் கூந்தல்
காற்றாடித் தோள் புரளத் தனியள் ஆகி
பெண்ணொருத்தி சிலம்பொன்று கையில் கொண்டு
பேரரசே உனைக்காண வந்தாள் என்றான் 4

தென்னவனும் கண்ணகியை அழைத்து நங்காய்
தேம்பியழும் காரணத்தைச் சொல்வாய் என்றான்
மன்னவனின் அருகிருந்த அரசி அவளின்
மாற்றத்தால் திடுக்கிட்டாள் முகத்தைப் பார்த்தாள் 5



தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணகி முழக்கம்.



சிலம் பொடு வந்தவளும் மங்கை நல்லாள்
சிற்றத்தாள், மருளுறும் மன்னா நானே
கலங்காத நீதியொடு கருணை என்றும்
கதிர் விடும் பூம்புகார்க் கன்னி என்றாள் 6

கூர்மதி இல்லாது கொடும்பழி சுமத்திக்
கொன்றனை கோவலன் ஆருயிர்த் துணைவி
பேர் கண்ணகி மஞ்சள் குங்குமம்
பெரிதும் இழந்து நான் அனாதையுமா னேன் 7
தென்னவன் மறுத்தனன் திருடனை அழித்தல்
தெரிவாய் மன்னவன் கடமை யன்றோ
புன் மொழி புகன்றனை புழுங்கிய நெஞ்சினாய்
பொய்மையும் மெய்மையும் அறியாப் பேதாய் 8



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செழியன் துளங்கக் கண்ணகி முழங்கினள்
திகைத்தனன் மன்னவன் அவையது நடுங்க
பழியில் என் கணவனைக் கள்வன் என்றே
பகர்ந்தனை காட்டுவன் கணத்தில் கள்வனை

பாராளும் அரசனாகிப்
பழி தன்னை உற்றாயே
பரிகம் அற்றாய்
பேராளும் நாயகனைக்
கள்வன் என்றாயே
பிரியக் கொன்றாய் 10

கையி லேந்தி என் சிலம்பில்
காண்பாய் நீ ஒலிக்கின்ற
மாணிக்கப் பரலே
மெய்யாக நின்மனையாள்
சிலம் பொலிக்கும் மிக்கபரல்
எதுவோ என்றாள் 11

கடல் பிறந்த முத்திசையும்
காற் சிலம்பே அரசிக் குண்டு
கண்ட உண்மை
உடன் அறிவான் பாண்டியனும்
உறுதுயரால் திடுக்கிட்டான்
ஏவலரைப் பார்த்து 12



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடர் செய்து கோவலன் பால்
எடுத்து வந்த சிலம்பிணையும்
கொணர்க என்றான்
கடந்த பெருந்தவச் செல்வி
கண்ணகியின் முன்பாக
அங்கே வைத்தாள் 13

KOHA JPL

பொலி விழந்த கருங்கூந்தல் சிலும்பிச் சுழலப்
பொற்சிலம்பைக் கரம் நடுங்கத் தூக்கி முன்னால்
வலி மிகுந்த நெடுஞ் செழியன் முகத்தில் படவும்
மாணிக்கப்பரல் சிதற உடைத்தாள் நங்கை 14

மன்னவனும் பரல் கண்டான் மனமும் சோர்ந்து
வஞ்சகனும் பொற்கொல்லன் சொல்லைக் கேட்டு
இன்னபழி சுமந்தேனே அந்தோ என்றான்
என் செய்தேன் எனவெண்ணி ஏங்கி நொந்தான் 15

## மன்னவன் மாண்டான்.

அருள் கொன்றேன் அரசர்க்காம் நீதி கொன்றேன்
அறங் கொன்றேன் மறம் கொண்டேன் நிலையும் கொண்ட
மருள் கொண்டேன் ஆய்வில்லாத் திறமும் கொண்ட
மன்னர்தம் குலப்பெருமை மாய்த்தேன் என்றான் 16

மதி குலைந்து நிலை குலைந்தேன் யானோ மன்னன்
மற்றவன்தன் சொற்கிசைந்த கள்வன் யானே
கதி குலைந்த என்னுயிரும் கெடுக என்று
காவலனும் அரியணையில் மடிந்து வீழ்ந்தான் 17



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருகிருந்த பேரரசி வீழ்ந்தாள் பிரிவே
அறியாதாள் கணவனடி தொழுது மாண்டாள்
இரு உடலில் ஓர் உயிரே ஆன இவ் உத்தமிக்கு
இரு நிலத்தில் தனிவாழ்வு உண்டோ பாரீர் 18

வேறு

ஆற்றாள் கண்ணகி அருசினம் பொங்க
அரமனை விலகினள் விரைந்தாள்
போற்றா மதுரையை மும்முறை சுற்றிப்
போனாள் புகுமெரி ஆனாள் 19

வழுவிலாப் பத்தினி நானெனில் இந்த
வளைந்த கோல் நகர் இன்றே
கொழுவுக எரிகனல் அழிகென இடது
கொங்கையைத் திருகியும் எறிந்தாள் 20

86570

## எழுந்தது செந்தீ !

விட்டதா செந்தீ விழுங்கிய தெல்லாம்
விண்ணளவு எழுந்தது, மேகம்
சுட்டது காய்ந்தது சோலைகள் கரிந்தன
சுழன்றது காற்றினில் புழுதி 21

வீதிகள் மாந்தரும் கட்டிய வீடுகள்
கனன்றன! கருகி வீழ்ந்தன
ஆதிகால முப்புரம் எரிந்தென எரியில்
ஆழ்ந்தது தீயவர் அழிந்தார் 22



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எரிநுழை இடங்கள் எல்லாம்
ஏகினாள் கண்ணகி மக்கள்
புரிசெயல் அறியாது ஓடினர்
போதலறியா நிலையே குலைந்தாள் 23

ஆன்றவள் கவலை பொங்க
ஆயிழை அலைந்த வேளை
தோன்றினள் மதுரைத் தெய்வம்
வருமுறை சொல்லி நின்றாள் 24

நாயகன் வருவான் தேவர்
வடிவினன் திருச் செங்குன்றம்
போயவன் தன்னைச் சேர்வாய்
போகுமுன் துன்பம் என்றாள் 25

அன்னையின் மொழியைக் கேட்டு
அகன்றனள் வணங்கிக் காளி
மின்செயும் கோயில் போய்த்தன்
மேவும் பொன்னிழை உடைத்தாள் 26

போனவள் கோயில் மேற்கு
வாயிலில் புகுந்து நீங்கி
வானநீர் வைகை ஆற்றின்
கரையினை வழியாக் கொண்டாள் 27

நெருங்கிய இருள்சூழ் இரவில்
நெடுங்கரை வழியாய்த்தானும்
மருங்கினில் தனியள் ஆகி
மங்கையும் பயணம் செய்தாள் 28



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பள்ளமும் மேடும் பாராள்
பருவயல் வரம்பும் ஏறி
உள்ளத்தில் அன்பு உந்த
உயிர்த்துணை கணவன் காண 29

முருகவேள் இருந்த குன்றின்
முன்னவள் சென்று பூத்து
மருமலர் சொரியும் வேங்கை
மரநிழல் தேடி நின்றாள் 30

## கற்புக்கனல்.

பதினாலு நாட்கள் சோர்ந்து
பற்றிய துன்பம் தீர
அதில் எழில் அமரர் கூடக்
கோவலன் இறங்கி வந்தான் 31

தேவர்கள் வியந்து போற்றித்
தேன்மலர் தூவிக் கண்ணகி
தேவியின் நாமம் வாழ்த்தி
தேசொடு எழுக என்றார் 32

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

உற்ற தலைவ னோடு வான
ஊர்தியில் ஏறினாள் உலகம்
கற்புக் கன லெனக் கை தொழக்
கண்ணகி தெய்வ மானாள். 33

முற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விற்பனையாகிறது !**

KOHA JPL

சிறுவர்கள் படித்து மகிழ்ந்திடச்
சிறந்த நூல்.

**கவிஞர் த. துரைசிங்கம் B. A, (Hon's)**
**எழுதிய**

சிறுவர் காவியம்.

# மாதவி மாண்பு

**மாதவியின் மாண்பு கூறும்**
**சீரிய சிறுவர் காவியம்.**

விலை ரூபா **5–50.**

விபரங்களுக்கு :


## ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை

*235, காங்கேசன்துறை வீதி,*
**யாழ்ப்பாணம்.**

86570

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாலர் நூல்வரிசை - 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org